**O.S.No.186/2014**

**Date:18.02.2019**

வாதி தரப்பு சாட்சி 4 – விக்னேஷ்குமார், கிராம நிர்வாக அலுவலர், சக்கிமங்கலம் கிராமம்

சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

குறுக்கு விசாரணை

என் பெயர் விக்னேஷ்குமார். நான் கிராம நிர்வாக அலுவலராக சக்கிமங்கலம் கிராமத்தில் பணிபுரிந்து வருகிறேன். நான் வட்டாட்சியருக்காக சாட்சி சொல்ல வந்துள்ளேன். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்வதற்கு அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். சர்வே எண்.177-2, 177-3ஏ, 178-1, 178-2 ஆகிய சர்வே எண்கள் என் கிராம எல்லைக்குள் உள்ளன என்றால் சரிதான். அதன் பட்டா எண் தெரியுமா என்றால் 712 ஆகும். அந்த சர்வே எண்கள் அடங்கிய அடங்கல் யார் பெயரில் உள்ளது என்றால் ராமசாமி வேளார் பெயரில் உள்ளது. 1386ம் பசலிக்குரிய ஆங்கில வருடம் 1977 என்றால் சரிதான். அந்த பசலி வருடத்திற்குரிய ஆவணம் கொண்டு வந்துள்ளேனா என்றால் கொண்டு வந்துள்ளேன். அந்த பசலியில் அந்த சர்வே எண்கள் யார் பெயரில் உள்ளது என்றால் குருசாமி சேர்வை பெயரில் உள்ளது. அந்த அடங்கல் ஆவணத்தின் சான்றிட்ட நகல் சா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்படுகிறது. அந்த ஆவணத்தில் உழவடைதாரர் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கிருஷ்ணன் என்ற பெயர் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தற்போது தாவாச் சொத்தை பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்வையிட்டுள்ளேன். அதில் தற்போது என்ன பயிர் செய்யப்பட்டுள்ளது என்றால் நெல் பயிரிடப்பட்டுள்ளது. அந்த இடத்தில் யார் இருந்து பயிர் செய்து வருவது என்றால் இந்திரா என்பவர் பயிர் செய்ததாகச் சொன்னார்கள். அதில் விவசாய கிணறு இருந்ததா என்றால் பார்க்கவில்லை. என் ஆவணங்களில் தற்போது அடங்கல் மற்றும் பட்டாவில் காளிமுத்து என்ற பெயர் உள்ளதா என்றால் இந்த பசலியில் இல்லை. சர்வே எண்.177-2ன் பழைய சர்வே எண் என்ன என்று ஆவணத்தில் உள்ளதா என்றால் உள்ளது. சர்வே எண்.177-3ஏ-ன் பழைய சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.220-3ஏ ஆகும். சர்வே எண்.178-1க்கு பழைய சர்வே எண்.221-1 ஆகும். சர்வே எண்.178-2க்கு பழைய சர்வே எண்.221-2 ஆகும். ஆவணத்தில் பயிரிடுபவர் காலத்தில் குத்தககைதாரர் கலத்தில் யார் பெயர் உள்ளது என்றால் கிருஷ்ணன் பெயர் உள்ளது.

(வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா மாற்றப்படுகிறது.)